


பக்கம் 13

# மஸ்ஜிட் இந்தியாவில் குழி ஏற்பட்டதற்கு மனிதர்களின் செயல்களும் வானிலையும் இதர காரணங்கள்

**கோலாலம்பூர், செப். 8 -** கோலாலம்பூரின் மையப் பகுதியில் உள்ள ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் கடந்த மாதத்தில், எட்டு மீட்டர் ஆழத்திற்கு குழி ஒன்று ஏற்பட்டதற்கான பல காரணங்களில், மனிதர்களின் நடவடிக்கைகளும் மண் அரிப்பும் அடங்கும் என்று, இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச் சூழல் நிலைத்தன்மைத்துறை அமைச்சு கூறியுள்ளது.

## மஸ்ஜிட் இந்தியாவில் ...

தரையில் ஊடுருவும் ராடார் கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வு நடத்திய கனிமம் மற்றும் புவிஅறிவியல் இலாகா உட்பட பல்வேறு நிறுவனங்களினால் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், இக்காரணங்கள் முடிவு செய்யப்பட்டதாக அமைச்சு தெரிவித்துள்ளது. “விசாரணைகளின் அடிப்படையில், அக்குழி பல காரணங்களினால் ஏற்பட்டிருக்கிறது. மனிதர்களின் நடவடிக்கைக்ள், வானிலை மற்றும் மண்ணுக்கு அடியில் உள்ள அடுக்குகளில் ஏற்பட்ட மண் அரிப்பு ஆகியவையும் அவற்றில் அடங்கும்.

“கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் (டிபிகேஎல்) தலைமையில், மஸ்ஜித் இந்தியா பகுதியின் நில அமைப்பைக் கண்காணித்து வரும் பணிக் குழுவினால், அடுத்த மூன்று மாதங்களுக்குள் புவியியல் மற்றும் துணை மேற்பரப்பு அமைப்பு பற்றிய தொழில்நுட்ப அறிக்கை தயாரிக்கப்பட்டு விடும்” என்று, நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவ்வமைச்சு கூறியது.

புவியியல் அடிப்படையில், கோலாலம்பூரின் அடித்தட்டு 30 விழுக்காடு சுண்ணாம்புக் கற்களையும் 70 விழுக்காடு கருங்கற்கள் உட்பட மேலும் சில வகையான கற்களைக் கொண்டிருப்பதாக அமைச்சு தெரிவித்தது.

இந்நிலையில், கோலாலம்பூர் இன்னமும் பாதுகாப்பான பகுதியாக இருப்பதை அமைச்சு வலியுறுத்தியது. எனினும், சாத்தியமான குழி மற்றும் தரை சரிவுகள் ஏற்படுவதை அடையாளம் காணவும் தடுக்கவும், அதன் மேற்பரப்பு மீதான கண்காணிப்பு, பராமரிப்பு மற்றும் ஆய்வு வழிமுறைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது.

கடந்த ஆகஸ்ட் 23ஆம் தேதி, இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தின் குப்பம் என்ற பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய எம். விஜயலட்சுமி என்பவர், சம்பவம் நிகழ்ந்த ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவின் ஒரு நடைபாதைப் பகுதியில் கால் வைத்த மறுகனமே ஏற்பட்ட ஒரு குழியில் விழுந்து காணாமல் போனார்.

அவரை தேடி மீட்கும் பணி, ஒன்பதாவது நாளில் நிறுத்தப்பட்டது. தேடி மீட்கும் குழுவினரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் அம்முடிவு எடுக்கப்பட்டதாக, கூட்டரசு பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தபா தெரிவித்திருந்தார்.